1978 மார்ச் 2]

Animal Husbandry Scheme

*358 Q.—Thiru N. RAMACHANDRA REDDY : Will the Honourable the Minister for Social Welfare be pleased to state :

(a) whether it is a fact that an Overseas Development Agency Scheme for the development of Animal Husbandry has been formed and a special officer has been posted to attend to the preliminary work; and

(b) if so, the present stage thereof?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : (அ) ஆம். ஓசூர் கால்நடைப் பண்ணையில் பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் ஒரு பால்வளத் திட்டம் நிறுவ செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இத் திட்டம் துவக்குவதற்கான ஆயத்த வேலைகளை மேற்கொள்ள தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலுள்ள ஒரு அலுவலர், நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) திட்டம் துவங்குவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது,

தென்னாற்காடு மாவட்டத்தில் மண்வள ஆராய்ச்சி.

*359 வினா— <u>திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்</u> : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் மண்வள ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளில் எப்போது செய்யப்பட்டது ?

(இ) அதன் முடிவு என்ன ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து ஒன்றிய வாரியாக மண் வள நிர்ணய வரைபடம் 1970 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

(இ) ஒவ்வொரு பகுதியின் மண்வளத்தை அறிவதனால் அந்தந்தப் பகுதியின் மண்ணின் வளத்தையும், குறைபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு, தேவையான உரத்தையும் அதன் அளவையும் நிர்ணயித்து, அதிக விளைச்சலை அடைய வழி வகுக்க

TRUTH ALONE TRIUMPHS